## சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**OS.NO.212/2016** **தேதி.**23.03.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.3 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 23.03.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.சேட்டு |
| த/பெ. | திரு.முத்தகவுண்டர் (எ) ஜோல்ல கவுண்டர் |
| வயது | 85/2026 |

துவக்க நேரம் 12.20 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. நான் எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் கீழ்மின்னல் கிராமத்தில் வசிக்கிறேன். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கீழ்மின்னல் கிராமத்தில் உள்ளது. குப்பனுக்கு சொந்தமான சொத்துக்கள் என்று நான் சொல்லும்நிலையில், குப்பனுக்கு என்ன சொத்து என்றால் ஏக்.0.20 நிலம். வாதி கருணாநிதி, குப்பன் என்பவரின் முதல் தாரத்து மகன் என்றால் ஆமாம், ஒரு பெண்ணும் இருக்கிறாள், அவர் பெயர் காளி.

2. காளி என்பவர் குப்பனின் மகள் என்பதற்கு ஏதேனும் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, எனக்கே தெரியும். காளியின் கணவர் பெயர் என்னவென்றால் தெரியாது, மறந்துவிட்டேன். காளி என்பவரை எந்த ஊரில் திருமணம் செய்துகொடுத்தார்கள் என்றால் இராணிப்பேட்டை, மணியம்பட்டு கிராமத்தில் திருமணம் செய்துகொடுத்தார்கள்.

3. காளியை மணியம்பட்டு கிராமத்தில் திருமணம் செய்துகொடுத்தற்கு ஆவணங்கள் உள்ளது என்றால் ஆமாம். குப்பனின் முதல் மனைவியின் பெயர் என்னவென்றால் இந்திராணி. குப்பனின் இராண்டாவது மனைவியின் பெயர் என்னவென்றால் கல்யாணி. இந்திராணி, தனது குழந்தையான வாதி கருணாநிதியுடன் அவரது தாயார் வீட்டிற்கு குழந்தை பிறந்தவுடன் சென்றுவிட்டார் என்றால் இல்லை, இங்குதான் இருந்தார், இங்குதான் என்றால் எந்த ஊர் என்றால், கீழ்மின்னல் கிராமத்தில்.

4. குப்பன் 2 வதாக திருமணம் செய்துகொண்ட கல்யாணிக்கு, எத்தனை குழந்தைகள் என்றால் நான்கு குழந்தைகள், ஒரு பெண், மூன்று ஆண்கள். குப்பன், கல்யாணியை எந்த வருடம் திருமணம் செய்துகொண்டார் என்றால் தெரியாது. குப்பன், இந்திராணியை எந்த வருடம் திருமணம் செய்துகொண்டார் என்றால் தெரியாது.

5. குப்பன், கல்யாணியை திருமணம் செய்யும்பொழுது, வாதி கருணாநிதிக்கு என் வயதிருக்கும் என்றால் 15 வயதிருக்கும். கருணாநிதிக்கு என்னை விட எத்தனை வயது குறைவாக இருக்கும் என்றால் எனக்கு 80 வயதாகிறது, கருணாநிதிக்கு 60 வயதிருக்கும். கல்யாணிக்கு என்னைவிட 10 வயது குறைவாகஇருக்குமா என்றால் இருக்கும்.

6. குப்பன்–கல்யாணி ஆகியோருக்கு ஏகாம்பரம் முதல் மகன் என்றால் சரிதான். ஏகாம்பரம் என்பவருக்கு ஒரு 55 வயதிருக்குமா என்றால் 55 வயதிற்கு மேல்தான் இருக்கும். குப்பன் அப்பொழுது கூரைவீட்டில் இருந்தாரா என்றால் இல்லை, தட்டோடு வீட்டில் இருந்தார். குப்பன், நல்ல பெரியவீடு கட்டி ஏகபோகமாகதான் வாழ்ந்துவந்தார் என்றால் ஆமாம்.

7. குப்பன் உயிருடன் இருந்தபொழுதே, மற்ற இரண்டு வீடுகளும் கட்டப்பட்டுவிட்டது என்றால் இல்லை, அவர் இறந்தபிறகுதான் கட்டப்பட்டது. குப்பனின் மகன் வாதி கருணாநிதிக்கு தாவா சொத்துக்களில் பாகம் உள்ளது என்றால் ஆமாம். காளி என்ற ஒரு

பெண்ணே இல்லை என்றாலும் பிரதிவாதிகள் சொல்லிகொடுத்ததுபோல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பத்மநாபன், 6ம் பிரதிவாதி சௌந்தரியை திருமணம் செய்துகொண்டதற்கு திருமண பத்திரிக்கை இருக்கும் என்றால் இருக்கும். குப்பனின் மகள் காளி என்பதாக இருந்தால் பத்மநாபன் – சௌந்தரி ஆகியோரின் திருமண பத்திரிக்கையை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான், பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

முடிவு நேரம் 12.40 P.M

Taken down before me in open court, read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.